# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 10
## First Term Examination – 2020 – Grade 10

வரலாறு | 33 | T | I | ஒரு மணித்தியாலம் One Hours

சுட்டெண் Index No

வரலாறு

### பகுதி - I

**பின்வரும் வினாக்களுக்கு மிகப் பெருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. இலங்கையின் புராதன காலரத்து இலக்கிய சமயத்தவல்கள் மற்றும் வம்சக்கதைகள் என்பன எவற்றில் எழுதப்பட்டுள்ளன.
    1. கல்வெட்டுக்களில் 2. பொற்சாசனங்களில் 3. ஏட்டுச்சுவடிகளில் 4. செப்பேடுகளில்

02. பெரகும்பா சிரித்த எனும் புகழ் காவியம் எக்காலத்திற்குரியது
    1. கோட்டை முதல் கம்பளைவரை 2. கோட்டை முதல் கண்டி வரை
    3. அநுராதபுரம் முதல் பொலன்னறுவை வரை 4. குருநாகல் முதல் கோட்டை வரை

03. ரிபைரோவின் இலங்கை வரலாறு எந்நாட்டை சேர்ந்தவர் எழுதிய இலக்கியம் ஆகும்
    1. ஆங்கிலேய இலக்கியம் 2. போர்த்துக்கேய இலக்கியம்
    3. பிரெஞ்சு இலக்கியம் 4. அரபு இலக்கியம்

04. அநுராதபுரக் காலம் முதல் கோட்டை இராசதானியின் ஆரம்பம் வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட நூல்களின் நோக்கம்
    1. சமய நோக்கம் 2. போர்நோக்கம் 3. தர்ம நோக்கம் 4. அரசியல் நோக்கம்

05. இலங்கைக்கு வருகை தராது இங்கு வருகை தந்தவர்களிடம் அனுபவங்களை கேட்டறிந்து நூல்களை எழுதியவர்
    1. பாகியன் தேரர் 2. மார்கோபோலோ 3. கொலம்பஸ் 4. தொலமி

06. இலங்கையில் கிடைக்கப்பபெற்ற புராதன நாணயம்
    1. கஹபண 2. கரண 3. தம்பமஸ்ஸ 4. சுவர்ண

07. சந்தேசிய என்பது
    1. போர் 2. தூதுபிரபந்தம் 3. வரலாறு 4. போதனை

08. இந்தியாவிலிருந்து கொண்டு இலங்கையைப் பற்றி எழுதிய போர்த்துக்கேய இனத்தவர்
    1. ஜோபாவோ ரிபைரோ 2.றொபேட்நொக்ஸ் 3.பர்னாவே டீவொ ரோஸ் 4. கொன்ஸ்தாந்திடீசா

09. அநுராதபுர அபயவிகாரையில் தங்கியிருந்த சீன நாட்டு பிக்கு யார்?
    1. ஹுயூங்சாங் 2. கொன்பியூசியஸ் 3. பாகியன் தேரர் 4. ராமேரஸ் சியாஸ்

10. கி.பி 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நாட்டு பழமையான நூல்
    1. மகாவம்சம் 2. தாதுவம்சம் 3. போதி வம்சம் 4. தீபவம்சம்

11. இலங்கையின் பௌத்த சாசன வரலாற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி எழுதப்பட்ட நூல் எது?
    1. ராஜரத்னாகரய 2. நிக்காய சங்கிரகய 3. வினய அட்டகதா 4. பூஜாவலிய

12. பின்வருவோரில் இலங்கைக்கு வருகை தந்து இலங்கைபற்றி எழுதியோரின் தொகுதி யாது?
    A. மெகஸ்தனிஸ் B. பாகியன் தேரர் C .தொலமி
    D.இபன்பதூதா E. றொபேட்நொக்ஸ் F. ஹியூங்சாங்
    1. BDF 2. CDE 3. BDE 4. ABD

13. “வம்சத்தப்பகாசினி“ என்பது எந்த வரலாற்று நூலின் உரைநூல் ஆகும்
    1. தீபவம்சம் 2. மகாவம்சம் 3. தூப வம்சம் 4. போதி வம்சம்

14. தனது அனுபவத்திலிருந்து கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைக் கொண்ட நூலை எழுதியவர்
    1. பல்டியஸ் 2. ரிபைரோ 3. றொபேட்நொக்ஸ் 4. குவேரோஸ்

15. இலங்கையில் 35000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்ட்ட இடம்“
    1. கிந்துள்கல பெலிவன 2. சிசிரிய அலிகல 3. பாகியன்கல 4. உடமல்ல

16. கற்கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிப்பாசறை எது?
    1. பாகியன் 2. பெல்லன்பதிபெலஸ 3. பண்டாரவளை 4. புத்தல

17. கற்றகால மனிதன் வலாழ்ந்த 30 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்
    1. பெல்லன் பதிபெலஸ 2. பட்டதொம்பலன 3. மினிகால்கந்த 4. அலிகல

18. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உப்பினைப்பாவித்தமைக்கு ஆதாரமாக விளங்கும் இடம்
    1. சிகிரிப்பொத்தன 2. பாகியன்கல 3. பட்டதொம்பலன 4. கித்துல்கல பெலிவன

19. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் சராசரி ஆயுட்காலம்
    1. 35 - 40 வயது 2. 30 - 40 வயது 3. 25 - 40 வயது 4. 35 - 45 வயது

20. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் தொழில்நுட்ப அறிவு பிரதிபலிப்பது
    1. மட்பாண்டத்தில் 2. வீடமைப்பில் 3. கல்லாயுதத்தில் 4.இரும்புப்பாவணையில்

21. இலங்கையில் முன்வரலாற்றுக்கால பண்பாட்டைக் கற்பதற்கான பிரதான ஆதாரமாகத் திகழ்வது எது?
    1. குகைகள் 2. அடக்கம் செய்த எலும்புக்கூடுகள் 3. மெகாலித் மயானங்கள் 4. பாசறைகள்

22. அஸ்தியுடன் கூடிய சிறிய பாத்திரங்கள் பெரிய பாத்திரத்திற்குள் வைத்துப் பாதுகாகக்கப்பட்ட மயானங்கள் எவ்வாறு அழைக்கப்படும்
    1. பாரணி மயானம் 2. மெகாலித் மயானங்கள் 3. கல்லறை மயானங்கள் 4. தரணி மயானம்

23. உடம்பில் வர்ணம் பூசுவதற்காக பயன்படுத்தப்பட்ட மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்திலான பூச்சுக்கள் கண்டுபடிக்கப்பட்ட இடம்
    1. இப்பன் கட்டுவ 2. உடரஞ்சமாடம் 3. சிகிரியா 4. தம்புள்ள

24. ஆரம்பகால வரலாற்றுக்காலம் நிலவிய காலப்பகுதி
    1.கி.மு 400 - கி.பி300 2.கி.மு 450 - கி.பி 300 3.கி.பி 450 - 300 4.கி.பி 450 - 550

25. தச்சர் வாழ்ந்த கிராமம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
    1. மணிகார காம 2. பட்டாண காம 3. வட்ட கீகாம 4. நியம்காம

26. பெரிய நகரக் குடியிருப்புகளைக் குறிக்கும் பெயர் யாது?
    1. நுருபுரம் 2. நாரம் 3. பட்டணயம் 4. புரம்

27. இந்நாட்டில் கி.மு 250ம் ஆண்டளலவில் எழுதப்பட்ட பிராமிக்கல்வெட்டில் குறிப்பிட்ட புரகமத்த என்பவரின் பதவி யாது?
   1. கட்டட கலைஞர்   2. நெசவு செய்பவன்   3. சிற்பாசாரி   4. ஓவியர்

28. இல்லத் தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுமத் பதவி யாது?
   1. பருமக   2. புறுமுகா   3. அரசன்   4. கமிக

29. ரூவன் வெலிசாயவிற்கு காணிக்கை வழங்கிய மன்னனின் சிலையானது அவ்விகாரை முற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன்னன் யாா்?
   1. துட்டகைமுனு   2. குட்டகண்ண அபயன்   3. பண்டுகாபயன்   4. பாதிகாபயன்

30. உருகுணை ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்ட களிமண்ணால் ஆன முத்திரை கண்டெடுக்கப்பட்ட இடம் யாது?
   1. தெவிபுர   2. புந்தல   3. மாகம   4. அலுகல்லே

31. இப்பன் கடுவ கல்லறையில் கண்டெடுக்கப்பட்ட மணிமாலையை பயன்படுத்தியவர்
   1. பிரபுக்கள்   2. பருமகமார்   3. மபுறுமுகா   4. ரஜ

32. 1ம் காசியப்பமன்னன் தன்னை எக்கடவுளாகக் கருதினான்?
   1. தர்ம தேவன்   2. சூரிய தேவன்   3. குபேரன்   4. கண்ணன்

33. “பதகு” எனும் அதிகாரியுடன் தொடர்புடைய பதவி ாயது?
   1. பொருளாளர்   2.உணவுச்சாலை அதிகாரி   3.தகரக்கட்டடம்   4.குதிரைக்குப் பொறுப்பானவர்

34. ரஜ எனும் பதவியின் பொருள்
   1. தளபதி   2. அரசன்   3. மந்திரி   4. மக்களை மகிழ்வாக வைத்திருப்பவர்

35. எல்லாளன் காலத்தில் பிரபல்யமான துறைமுகம்
   1. கோகர்ண   2. மாந்தை   3. மாகம   4. பல்லவங்க

36. இலங்கை வரலாற்றில் நீதி தவறாமல் ஆட்சி புரிந்த மன்னன் யாா்?
   1. ராஜராஜ சோழன்   2. மாகன்   3. எல்லாளன   4. செண்பகப்பெருமாள்

37. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த கடைசி மன்னன் யாா்?
   1. சங்கிலியன்   2. பரராஜ சேகரன்   3. விஜயகூழங்காகி   4. வரதோயன்

38. யாழ்ப்பாண இராச்சியம் சிறந்து விளங்கியமைக்கான ஆதாரமாக இன்றும் காப்படும் சாட்சியங்கள் எவை?
   1. யாழ்ப்பாணக்கோட்டை, சங்கிலியன் சிலை   2. சங்கிலியன் சிலை, யாழ் நூலகம்
   3. சங்கிலியன் அரண்மனை முகப்பு, மந்திரிமனை   4. நல்லூர் முருகன் கோயில் கோட்டை

39. இலங்கையினை நீண்ட காலம் ஆக்கிரமித்து ஆட்சிபுரிந்த தென்னிந்தியர் யாா்?
   1. சோழர்   2. பாண்டியன்   3. சேரர்   4. பல்லவர்

40. ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்ட வன்னி அரசன் யாா்?
   1. கைலை வன்னியன்   2. பண்டாரவன்னியன்
   3. காக்கை வன்னியன்   4. வீர பாண்டிய வன்னியன்

(40× 1= 40 புள்ளிகள்)

யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 10
## First Term Examination – 2020 – Grade 10

| வரலாறு | 33 | T | II | மூன்று மணித்தியாலம் Three Hours |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

**வரலாறு**

பகுதி - II

முதலாம் வினா கட்டாயமானது
ஏனையவைகளில் ஐந்திற்கு விடையளிக்குக

01. அ. கீழ்வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரப்பட்ட இலங்கை புறவுருவில் குறித்துக் காட்டுக.
1. நல்லூர், களனி கங்கை, பாஹியன்கல, கந்தரோடை, கோகர்ண, அநுராதபுரம், செங்கடகல, சிலாபம், மினிகாகல்கந்த, மாணிக்ககங்கை, கலாவாவி, பொலன்னறுவை
(12 புள்ளிகள்)

2. கீழ்வரும் இடங்களை உலக புறவுருவில் குறித்துக் காட்டுக
செங்கடல், மும்பாய், பாக்கு நீரினை, சுமாத்திரா, பத்தேவியா, அரேபியா
(6 புள்ளிகள்)

ஆ. கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளைத் தருக
A . இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன் யார்?
B. அநுராதபுரத்தினை திட்டமிட்டு தலைநகர் ஆக்கியவன் யார்?
C. இலங்கையில் பௌத்த மதத்தை பரப்புவதற்கு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர் யார்?
D. 1ம் விஜய பாகுவினால் சித்தரும்பி புதத்நாயக்கவுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணத்தின் பெயர் யாது?

இ. 1. a. உரு Aயினால் ஆக்கப்பட்ட ஆக்கம் யாது?
b. இதை உருவாக்கிய மன்னன் யார்?
c. இது காணப்படும் இராச்சியம் யாது?
d. இதில் பொறிக்கப்பட்ட மிருகம் யாது?



படம் A

(4 புள்ளிகள்)

2. a. உரு Bயில் காணப்படுபவர் யார்?
b. இவர் வாழ்ந்த காலப்பகுதி யாது?
c. இவர் வாழ்ந்த இடம் யாது?
d. இவரின் இனம் யாது?



(4 புள்ளிகள்)

படம் B

02. 1. வரலாற்றுக் காலங்களை வகைப்படுத்துக? (3 புள்ளிகள்)
2. இலங்கையில் ஆதி மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் 4 தருக? (4 புள்ளிகள்)
3. ஆரம்ப கால வரலாற்றுக் குடியிருப்புகளின் இரு இயல்புகளை இரு காரணிகளினூடாக விளக்குக? (5 புள்ளிகள்)
4. முன்வரலாற்றுக்காலம் மாற்றங்களுக்கான சகாப்தமாகக் கருதப்படுவதற்கு ஏதுவான மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக (6 புள்ளிகள்)

03. 1. கல்வெட்டுக்களின் வகைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
2. a. இலங்கைப்படத்தை வரைந்த கிரேக்க இனத்தவர் யார்?
b. அநுராதபுரத்தின் ஆரம்பகால கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்து யாது?
c. வசபன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தமைக்கு ஆதாரம் யாது?
d. கோட்டை முதல் கண்டி வரை வரலாற்றினை அறிய உதவும் தூதுகாவியம் ஒன்று தருக? (4 புள்ளிகள்)
3. வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் கல்வெட்டுக்கள் முக்கியத்துவம் பெறும் விதத்தை இரண்டு விடயங்களைக் கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. வரலாற்றைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் மூன்றை விளக்குக? (6 புள்ளிகள்)

04. 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உபகரணங்களைச் செய்ய பயன்படுத்திய மூன்று வகையான கற்களைத் தருக? (3 புள்ளிகள்)
2. i.வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக்குகைகள் இரண்ட தருக? (2புள்ளிகள்)
ii.கற்கால மனிதனின் உணவுகள் இரணடு தருக? (2புள்ளிகள்)
3. உடரஞ்சா மட வீட்டின் தொழில் நுட்பச்சிறப்புக்கள் மூன்று எழுதி இரண்டை விளக்குக? (5புள்ளிகள்)
4. ஆரம்ப வரலாற்று காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பல் கோல வளர்ச்சியின் இயல்புகள் மூன்றினைத் தந்து விளக்குக? (6புள்ளிகள்)

05. 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் எழும்புகள் கண்டெடுக்கப்பட்ட குகைகள் மூன்று தருக? (3புள்ளிகள்)
2. முன்வரலாற்றுக்கால மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் 4தருக? (4புள்ளிகள்)
3. வரலாற்றுக்கு முற்பட்ட கால மரணச்சடங்கு முறை, முன்வரலாற்றுக்கால மரணச்சடங்கு முறை என்பவற்றை விளக்குக? (5புள்ளிகள்)
4. இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று விடயங்களை விளக்குக?

06. 1. குளங்களை மையப்படுத்தி வளர்ச்சியடைந்த குளக்கிராமங்கள் பற்றி மகாவம்சம் கூறும் 3 குளக்கிராமங்களை தருக? ( 3புள்ளிகள்)
2. கீழ்வரும் கிராம மக்களின் தொழில்களைதர் தருக
A. கசீகார காம
B . கும்பகார காம
C . கேவட்டகாம
D. கோபால காம (4புள்ளிகள்)
3. கிராமத்தலைவன் (கமிக) ஒருவன் எவ்வாறு உருவாகின்றான் என்பதை விளக்குக. (5 புள்ளிகள்)
4. பண்டைய கால மக்கள் குளத்தொகுதிகளை உருவாக்கியதன் நோக்கங்கள் இரண்டை விளக்குக.? (6புள்ளிகள்)

07. 1. அரசன் ஒருவனின் கடமைகள் 3 தருக? (3புள்ளிகள்)
2. கமிக ஒருவரின் கடமைகள் 4 தருக? (4புள்ளிகள்)
3. பண்டுகாபய மன்னனின் அரசியல் பணி இரண்டினையும் பொருளாதாரப் பணி ஒன்றினையும் தந்து விளக்குக. (5புள்ளிகள்)
4. துட்டகைமுனு மன்னனின் அரசியல், சமய பண்பாடுகள் 3 தந்து விளக்குக. (6புள்ளிகள்)